Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 25/2021
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | கோபிநாதன் | Calling: | டிரைவர் |
| Father's Name/ Husband's Name: | விஸ்வநாதன் | Religion: | |
| Village: | குந்தானிமேடு | Age: | 38 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 10.03.2026 நேரம் : 11.40 AM

எ.த.சா.1 முதன்மை விசாரணை.

நான் இவ்வழக்கில் 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் ஆவேன். இவ்வழக்கின் புகார்தாரர் எனக்கு பெரியப்பா. என் மீதும் 2ம் எதிரி ஜெயவேல் என்பவர் மீதும் வேணு என்பவர் சண்டை வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 2ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. 2ம் எதிரி எனது ஊரை சார்ந்தவர் அல்ல, மேட்டுபாளையத்தை சார்ந்தவர். என் அம்மா புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். அதனால் என் தாத்தா எனக்கு 1 ஏக்கர் 8 சென்ட் நிலத்தை எழுதிவைத்தார். நிலத்தை எனது பெயரில் எழுதிவைத்துவிட்டார் என்பதற்காக என்மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். என் மீது அவர் நிலம் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு ஒன்றும் சிபிசிஐடியில் ஒரு வழக்கும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் கொடுத்துள்ளார். அது சம்மந்தமாக ஆவணங்கள் என்னிடம் உள்ளது. அதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

(ஆவணங்களை குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது. )
சாட்சி கையொப்பம்
(ஓம்.) கோபிநாதன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K